பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 07 வெள்ளிக்கிழமை (22.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 27

# இலங்கை விவகாரத்தில் புதுடில்லியின் கொள்கையில் திருப்பத்துக்கான அறிகுறி

## தமிழ்க் கூட்டமைப்பினரின் வருகை குறித்து இந்திய அவதானிகள் மத்தியில் இப்படிக் கருத்து

புதுடில்லி, டிசம்பர் 22

**இலங்கையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று - தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் ஆசியுடன் - மத்திய அரசுத் தலைவர்களைச் சந்திப்பதற்காகப் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டிருப்பது இலங்கை விவகாரத்தில் புதுடில்லி இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கையில் முக்கிய திருப்பம் ஒன்று ஏற்பட்டிருப்பதையே எடுத்துக் காட்டுகின்றது.**

**இந்திய - இலங்கை உறவுநிலை குறித்து விமர்சித்து வரும் அந்நாட்டு அரசியல் அவதானிகள் சிலர் இப்படிக் கருத்து வெளியிட்டிருக்கின்றனர்.**

இலங்கையில் தமிழர் படும் அவலங்கள் குறித்த தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு சென்னையில் விரிவாக எடுத்துக்கூறியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிகள் குழுவினர், இந்திய மத்திய அரசுத்தலைவர்களைச்சந்தித்துப் பேசும் முகமாகப் புதுடில்லி வந்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எம்.பி. தலைமையில் வந்திருக்கும் எம்.பிக்கள் குழுவில் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

**பிரதமரையும் சோனியாவையும் சந்திப்பர்**

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், கூட்டமைப்பு எம்.பிக்கள் குழுவினர், புது

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பொலிஸ் நிலை மீது கிரனேட் வீச்சு!

வவுனியா, டிசெ.22

வவுனியா - மன்னார் வீதியில் அமைந்துள்ள பொலிஸாரின் காவலரண் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. எனினும், இந்தச்சம்பவத்தில் சேதங்கள் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்தின் பின்னர் அந்தப் பகுதியில் படையினரும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ)

## ஷெல் வீச்சில் சிறுவர்கள் காயம்

கொழும்பு, டிசெ.22

மட்டக்களப்பு, வாழைச்சேனை - கும்புறுமூலை இராணுவ முகாமை இலக்கு வைத்து விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 2

(08ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்தமிழர் வாழ்வுரிமையைக் கோரி

## தமிழ்நாடு முழுவதிலும் இன்று மனிதச் சங்கிலிப் போராட்டம்

### ஆளுங்கட்சியான தி.மு.கவும் ஆதரவு

சென்னை, டிசெ.22

ஈழத்தமிழர்களுடைய வாழ்வுரிமையைப் பாதுகாக்கக்கோரி இன்று வெள்ளிக்கிழமை தமிழகத்தில் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெறவுள்ளது.

திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மனிதச்சங்கிலிப் போராட்டம் தலைநகர் சென்னை மற்றும் மாவட்டத் தலைநகரங்களில் பரவலாக நடைபெறும் என்று அதன் ஏற்பாட்டாளரான திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்தார்.

சென்னையில் இப்போராட்டம் மெமோரியல் அரங்குக்கு எதிரே இன்று காலை 11 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார்.

இந்தப் போராட்டத்தில் ஆளுங்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகமும் பங்கேற்கும். இது குறித்து அந்தக் கட்சி

(08ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

கிளிநொச்சி, டிச. 22

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி) தலைவர் பீற்றர் கரகோலிங் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

வாகரை உட்பட வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது இடம்பெற்று வரும் மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் குடியிருப்புப் பகுதிகள் மீது இராணுவத்தினரால் நடத்தப்படும் ஆட்லறி ஷெல் தாக்குதல்கள், தமிழர் பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருள்களை எடுத்துச் செல்வதில் ஏற்பட்டிருக்கும் தடங்கல்கள் குறித்தும் இதில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாகரையில் பொதுமக்கள் வாழும் பகுதிளைப் பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும்படி விடுதலைப் புலிகள் முன்னர் ஐ.சி.ஆர்.சியிடம் கேட்டிருந்தனர். இது தொடர்பாகவும் நேற்றைய சந்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ யாழ். வந்து நிலைமையை ஆராய்ந்தார்

யாழ்ப்பாணம், டிசெ.22

குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக நேரில் அறிவதற்காக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

அவருடன் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் ஜெயவிக்கிரமவும் வந்தார்.

விமானத்தில் பலாலி வந்த இவர்கள் யாழ். நகருக்கு ஹெலிகொப்டரில் வந்து சேர்ந்தனர்.

யாழ். நூலகத்தில் நடந்த விசேட கூட்டத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரும் ஆளுநரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பங்கு கொண்டார். அத்தியாவசிய சேவைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் பங்குபற்றிய நேற்றைய கூட்டத்தில் குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவந்தது.

உணவு விநியோகத்தை மேம்படுத்துவது, பாடசாலைப் பாடப் புத்தகங்களைப் பகிர்ந்தளிப்பது, விவசாய உற்பத்திகளை எடுத்துவர போக்குவரத்து வசதி வழங்குவது, மீன்பிடித் தடைகளை நீக்குவது, எரிபொருள், மின்சாரம், மருந்துவகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக விநியோ

(08ஆம் பக்கம் பார்க்க)

பசில் ராஜபக்ஷ குழுவினர் பலாலி வந்தபோது ……….



யாழ்.நூலகத்தில் நடந்த கூட்டத்தின்போது…



## 19 இளைஞர்கள் கடத்தல்

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றில் பயணித்த இளைஞர், யுவதிகள் 19 பேர் வழியில் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர் என இணையத்தளம் ஒன்று தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் இரவு 10மணியளவில் ஏறாவூர் - கோரக்கல்லிமடுப் பகுதியில் வைத்து ஆறு பேர் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டுக் கடத்திச்செல்லப்பட்டனர் என்பது விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடத்தப்பட்ட ஆறு பேரையும் தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## பருத்தித்துறையில் ஆயுதங்கள் மீட்பு!

பருத்தித்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பாதுகாப்புப் படையினரால் ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

'ரி-56' ரகத் துப்பாக்கி-02, மகஸின்-03 மற்றும் தோட்டாக்கள்-92 போன்ற ஆயுதங்களே படையினரால் மீட்கப்பட்டிருக்கின்றன. படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



நயினாதீவை வசிப்பிடமாகக் கொண்ட
திரு.திருமதி சிவகுமார் - சுகந்தினிதேவி
தம்பதியரின் செல்வப் புதல்வி
**ஜெயசோதிகா**
தனது இரண்டாவது பிறந்தநாளை
இன்று (22.12.2006) வெள்ளிக்கி
ழமை தனது இல்லத்தில் வெகு விம
ரிசையாகக் கொண்டாடுகின்றார்.
இவரை பெற்றோர், உற்றார்,
உறவினர் அனைவரும்
நயினை நாகபூசத்ணி அம்மன் அருள் பெற்று
பல்லாண்டு காலம் வாழ்க என
வாழ்த்துகின்றனர்.

வாழ்த்துபவர்,
**தாத்தா, மாமா.**

(63647)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்

841 நிலம்

வெற்றி இலக்கங்கள்

கன்னி **15 22 23 54**

**19-12-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 4726039 - 4740812

ஜக்பொட் பரிசு ரூபா.7,882,375/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 321,474 | 10/- | 3,214,740/- |
| 2 இலகககங்கள் | 29,597 | 20/- | 591,940/- |
| 1 இல. + லக்கினம் | 29,212 | 30/- | 876,360/- |
| 2 இல. + லக்கினம் | 2,682 | 100/- | 268,200/- |
| 3 இலக்கங்கள் | 790 | 500/- | 395,000/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,882,375/- | - |
| மொத்தம் | | | 6,111,240/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 383,837 | | 7,134,740/- |

**இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,241,425/-**

தொடர் இல. 5613650 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 4739483-5-69 |
| கம்பஹா | 4732396-3-42 |
| கேகாலை | 4728891-3-64 |
| மாத்தறை | 4727813-7-37 |
| களுத்துறை | 4726750-2-39 |


# 31 ஆம் நாளில் நினைவுகூறுகின்றோம்

மலர்வு
20
*
07
*
1929



உதிர்வு
22
*
11
*
2006

*அமரர்* **கந்தையா இராசேந்திரம்**

அன்புக்கோர் அணிகலனாய் அவனியில் வாழ்ந்தீர்
பண்புக்கோர் இருப்பிடமாய் பாரினில் திகழ்ந்தீர்
இன்பவாழ்வில் எம்முடன் கலந்தே இன்புற்றிருந்தீர்
இன்று எமைத் தவிக்கவிட்டு ஏன் பிரிந்து சென்றீர்?
துன்பவாழ்வு வேண்டாமென்றே துவண்டு போனீரோ?
தூய நல்லிதயமே! உம்மை நினைவு கூருகின்றோம்
அன்புடன் அரசடி விநாயகர், கலட்டி அம்மன் தாளில்
அமர்ந்தே சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்!

16, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம். (63650)

நினைவில் துயருறும்,
**வே.வடிவேல் குடும்பம்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**வேலாயுதம் பத்மநாதன்**
*(கந்தசாமி)*

தோற்றம்
04.05.1937

மறைவு
01.01.2006

*திதி: 22.12.2006*

**ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம் துயரம் - ஐயா!**

4ஆம் வட்டாரம்,
காளி கோயிலடி, புங்குடுதீவு. (63646)

*உங்கள் நினைவுகளுடன் வாழும்*
குடும்பத்தினர்.


# ENGLISH CLASSES

Gr 6 முதல் G.C.E. O/L வரையிலான சகல தரங்களுக்கும்
English Literature
English Language Classes
ஆரம்பமாகிவிட்டன.
English Literature (A/L) 2007, 2008
General English (A/L) 2007, 2008
வகுப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
English Medium Students க்கான விசேட
English Classes ஆரம்பமாகவுள்ளன.
[அனுமதிக்குப் பெற்றார் வருகை அவசியம்]
பல்கலைக்கழக மாணவர்களுக்கான
ESL - G.A.Q, B.A Part I, B.A Final
English Literature - G.A.Q, B.A Part I, B.A Final
வகுப்புகள் நடைபெறுகின்றன.

*தொடர்பு:*
**கோ.சுப்பிரமணியம்**
*62, பழம் றோட், கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*


# கண்ணீர் அஞ்சலி

மொறட்டுவ பல்கலைக்கழக பொறியியல் பீட 2ஆம் வருடத்தில் கல்வி கற்கும் எமது பாசமிகு நண்பன் **சுஜீவனின்** தந்தை

**செல்லமுத்து விநாயகமூர்த்தி**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். நண்பனின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நண்பர்கள்.**
A/L *2004*

# கண்ணீர் அஞ்சலி

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவனும், கொக்குவில் இ.க பழைய மாணவர் சங்கத் தலைவரும், கொக்குவில் இ.க. பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அறங்காவலர் சபைத் தலைவரும், பொதுநல சேவையாளருமாகிய

தெய்வசித்தன்

**இராஜரட்ணம் நடராசா**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு
கொக்குவில் இந்துக் கல்லூரிச் சமூகம்
அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.
அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

*கொ.இ.க. பழைய மாணவர் சங்கம் கொக்குவில், கனடாக்கிளை, கொ.இ.க. பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய அறங்காவலர் சபை.*

# கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஓடையம்பதி கற்பகவிநாயகர்
ஆலய தலைவர் தெய்வசித்தன்
*அமரர்*
**இராஜரட்ணம் நடராசா**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக்
காணிக்கையாக்குவதுடன்
பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ஆலய பரிபாலன சபையினர்,*
*தொண்டர் சபையினர், ஆலய அடியார்கள்.*

# மரண அறிவித்தல்

## இராஜரட்ணம் நடராசா

*(கற்பகப்பிள்ளையார் தேவஸ்தான தர்ம கர்த்தா சபைத் தலைவரும், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்ம கார்த்தா சபை உப தலைவரும், முன்னாள் லயன்ஸ் கழக வலயத் தலைவரும், கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உப தலைவரும், இளைப் பாறிய பொறியியலாளர் - வீதி அபிவிருந்தி அதிகார சபை)*

கொக்குவில் மேற்கு அரசடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜ ரட்ணம் நடராசா நேற்று (21.12.2006 ) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராஜரட்ணம்-அன்னலட்சுமி தம்பதியரின் மகனும் மதியாபரணம் - பாக்கியம் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம், இந்திரலிங்கம் (உதவிப் பிராந்தியக் கணக்காளர், இ.பே.ா.ச), இராசலட்சுமி, தியாலிங்கம் ஆகியோரின் சகோதரனும் பால சுப்பிரமணியம், சிவலோகேஸ்வரி, கருணேஸ்வரி (U.K.), சொர்ணகாந்தி, கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் சிவதாசன் (கொழும்பு), விவேகானந்தம் (U.K.) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப ஒரு மணிக்கு இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தேவாலய வீதி,*
*உரும்பிராய்.*

*தகவல்:*
[illegible]
*(சகோதரன்)*

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை
மடியில்
21
*
10
*
1984



ஆண்டவன்
அடியில்
23
*
10
*
2006

*அமரர்* **அம்பலவாணர் நாகதீபன்**

இன்று [22.12.2006] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் அன்னாரின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*புளியன்கண்டு பிள்ளையார் கோயிலடி,*
*கூழாவடி, ஆனைக்கோட்டை.* (63643)

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராஜா தங்கமணி



சங்கானையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா தங்கமணி நேற்று (21.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் நடராஜாவின் பாசமிகு மனைவியும் தர்மராஜா, நிர்மலா, சகுந்தலாதேவி, ஜெயலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு தாயும் இராஜேஸ்வரி, புவிபாலசிங்கம், சத்தியநாதன், ஆனந்தராஜா (கனடா) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி வடக்கு.* (63502)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முருகேசு உபயசுந்தரம்பிள்ளை



கருங்காலி, காரைநகரை பிறப்பிடமாகவும் பிரப்பங்குளவீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு உபயசுந்தரம்பிள்ளை நேற்று (21.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகேசு - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சண்முகானந்தன் (சுவிஸ்), நித்தியானந்தன் (லண்டன்), சிவரஜனி (கிளிநொச்சி), தயானந்தன் (உரிமையாளர்-தயா ஸ்ரோஸ்), அருள்நிதி (லண்டன்), சிவானந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு தந்தையும் பரமேஸ்வரி, நாகராசு, செல்வமணி, குலமணி, லட்சுமணன், நேருலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மஞ்சுளாதேவி, சிறிவேணி, காண்டீபன், பாலேந்திரன் ஆகியோரின் மாமனும் சோபிகா, மதுஷன், கலஜா, ஆர்த்திகா, கருணராஜ், லவராஜ், வசந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*58, பிரப்பங்குளம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (63638)

தகவல்:
**மகன் (தயா).**

## கந்ததேவர் முருகவேல்

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் சிவன் கோயில் வடக்கு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்ததேவர் முருகவேல் (செல்லமுத்து) இந்தியாவில் 20.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்ததேவர் - ஆவுடையம்மாள் தம்பதியரின் அன்பு மகனும் சீனியம்மாவின் அன்புக் கணவரும் சுப்புலஷ்சுமி, சுப்பிரமணியம், கறுப்பையா, மீனாட்சி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, சாந்தி, வசந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் சங்கிலித்தேவர், ராஜேஸ்வரி, லஷ்சுமி, பழனிவேல், மணி, விஜியபாண்டி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.12.2006 வியாழக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மகன், பேரப்பிள்ளைகள்.**

## ஆறுமுகம் கந்தையா

**[காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்]**

கீரிமலைவீதி, காங்கேசன்துறையப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா நேற்று (21.12.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதிவதனி (ஆசிரியை, யா/ குளமங்கால் றோ.க. வித்தி-மல்லாகம்), பாலமுரளி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை அருகாமை,*
*காங்கேசன்துறை வீதி,*
*மல்லாகம்.*

தகவல்:
**மதிவதனி (மகள்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழிநீர் அஞ்சலி



அமரர்
### நாகமணி மகேந்திரலிங்கம்
(பணியாளர் - பனை அபிவிருத்திச் சபை,
தலைவர் - பணியாளர் நலன்புரிச் சங்கம், ப.அ.சபை)

மண்ணில் 18 - 10 - 1952 விண்ணில் 17 - 12 - 2006

எமது சபையில் நல்லதோர் ஊழியனாய்
எங்கள் சங்கத்தின் பெருமைமிகு தலைவனாய்
எல்லோரும் பாராட்ட சேவை செய்து எமைப்பிரிந்த
அன்னாரின் இழப்பினால் வருந்துகின்றோம்.

அன்னாரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தேசிய வீடமைப்பு செயலகக் கட்டடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பனை அபிவிருத்திச் சபை.

(63581)

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின் றது.
உடனடிப் பயணம்.
தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811,

(சி/50463)

## கண்ணீர் அஞ்சலி

அமரர் சின்னத்தம்பி இரத்தினசிங்கம் (குருந்தவை)

அமரர் முத்துத்தம்பி அந்தோனிப்பிள்ளை

ஆகியோர் எமது ஸ்ரீ வராகி சனசமூக நிலைய முன்னாள் தலைவரும், அங்கத்தவருமாவார்கள். அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ச.ச.நிலையத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

கொக்குவில் மேற்கு.

ஸ்ரீ வராகி சனசமூக நிலையமும்,
ஸ்ரீ விளையாட்டு கழகமும்.

## யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
## தரம் 6 அனுமதி - 2007

தரம் 6 அனுமதிக்குரிய விண்ணப்பப்படிவத்தை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவு திகதி:
**30.12.2006**

(59627) - அதிபர்

## மரண அறிவித்தல்கள்

### செல்லப்பா சிவஞானம்



(புங்குடுதீவு-5ஆம்வட்டாரம்)

புங்குடுதீவு,முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம்வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா சிவஞானம் புங்குடுதீவில் 19.12. 2006 செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் அமரர்களான திரு.திருமதி செல்லப்பா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான திரு.திருமதி ஐயம்பிள்ளை - அன்னபூரணிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகனும் திருமதி சிந்தாமணியின் (லண்டன்) அருமைக் கணவரும் திசைநாதன் (ஜேர்மனி), சதாநந்தன்(ஜேர்மனி), சபாநாதன் (ஜேர்மனி), அமரர் நவமணி(விஜி) மற்றும் சற்குணராசா (லண்டன்) , கண்ணதாசன் (கனடா), சிறீவாணி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் நேத்திராகாந்தி(ஜேர்மனி), சிலம்புச்செல்வி (ஜேர்மனி), நாகேஸ்வரி(ஜேர்மனி), விஜயகலா(லண்டன்), சிறீகலா(கனடா), சுகுணானந்தன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமனும் துஸ்யந்தன், கிருத்திகா, கீர்த்தனா, ஆர்த்திகா, தேவகி, கிருத்தா, லுக்தா, சகீஸ், சுயானா, யடிக்கா, தனந், ஷசன், ஷசானா ஆகியோரின் அன்புப் பேரனும் சதாசிவம் (கொழும்பு), அமரர் இரத்தினம் மற்றும் அங்கையற்கண்ணி (புங்குடுதீவு), கமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமரர்கள் நாகம்மா, இராசேந்திரம், தம்பாபிள்ளை, வைத்திலிங்கம்,பூபாலசிங்கம் மற்றும் சிவசுப்பிரமணியம்(ஓய்வுபெற்ற ஆசிரியர், புங்குடுதீவு), குமரையா (கொழும்பு), குணமலை (கொழும்பு), சாந்தலிங்கம்(சுவிஸ்), சிவராசா (கனடா) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.12.2006 செவ்வாய்க்கிழமை பிற்பகல் அவரது புங்குடுதீவு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புங்குடுதீவு-1. (63590) இ.அங்கையற்கண்ணி (சகோதரி),

### திருமதி கந்தையா தங்கம்மா



யாழ்ப்பாணம், ஆரியகுளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா தங்கம்மா 20.12.2006 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து கந்தையாவின் அன்பு மனைவியும் அன்னலெட்சுமியின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கமலேஸ்வரி, சுந்தரலிங்கம் (கனடா), பஞ்சாட்சரலிங்கம் (கமலேஸ்வரி ரெக்ஸ் - யாழ்ப்பாணம், கொழும்பு), மகேந்திரலிங்கம் (கொழும்பு), ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் நவரஞ்சனி, உதயகலா, ஜெசிந்தா, பரஞ்சோதி, விஜயராசா, விஜி, ஸ்ரீ, குமாரி ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.12.2006 புதன்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, 2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(63594)

தகவல்:
ஆ.பஞ்சாட்சரலிங்கம்,
(உரிமையாளர் - கமலேஸ்வரி ரெக்ஸ்,
கொழும்பு, யாழ்ப்பாணம்)

## HND HND HND HND

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

New Batch Starts on 22/01/2007

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

↑

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL

Approved "A" Grade Training Centre

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல்யப்பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர்.

சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் உலகில் பிரபல்யமான BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.

## IIS CITY CAMPUS

# 200, Sivan Pannai Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk

### டிப்ளோமா கற்கும் ஆசிரியர் கவனத்துக்கு

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா முதலாம் வருடப் பரீட் சைக்குத் தோற்ற வுள்ள சகல ஆசிரியர் களையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந் துக்கல் லூரியில் இயங்கும் நிலையத்துக்கு சமுகம் தருமாறு சிரேஷ்ட விரி வுரையாளரும் பிராந்திய இணைப் பாளருமாகிய திருமதி த.வில்வநாதன் கேட் டுள்ளார். (202)

### தே.அ.அட்டைகள் ஒரு தொகுதி வந்துள்ளன

தென்மராட்சி, டிசெ.22

தென்மராட்சி பிரதேச செயலகம் ஊடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியினருக்கான தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன. அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர் மூலம் உரியவர்களுக்கு வழங்கப் படுமென பிர தேசசெயலக அ. அ. பிரி வினர் தெரிவித்தனர். (202)

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2007

01) கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 26.12.2006 நண்பகல் 12மணிவரை.
02) கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 27.12.2006 நண்பகல் 12.30 மணிவரை.
03) கேள்வி திறக்கப்படும் திகதி : 27.12.2006 பிற்பகல் 14மணி.
04) கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப் பணம் ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.
5) கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச்செய்தல் வேண்டும்.
6) மேலதிக விவரங்களை அந்தந்த உபஅலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1) நெல்லியடி மீன் சந்தை | 90,000.00 | 2,500.00 | 300.00 | -- |
| 2) கொட்டடிச்சந்தை | 1,900.00 | 500.00 | 300.00 | -- |
| 3) நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை இல.1 | 42,000.00 | 500.00 | 300.00 | -- |
| 4) நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை இல.1 | 240,000.00 | 5,000.00 | 300.00 | 200.00 |
| உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 5) அந்திரான் சந்தை | 14,500.00 | 500.00 | 300.00 | -- |
| 6) நவிண்டில் சந்தை | 3,150.00 | 500.00 | 300.00 | -- |
| 7) உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,100.00 | 500.00 | 300.00 | 100.00 |
| 8) அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 166,500.00 | 5,000.00 | 300.00 | 100.00 |
| கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 9) துன்னாலை வடக்கு சந்தை | 500.00 | 500.00 | 300.00 | -- |

**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.
18.12.2006.**

**திரு.சி.வே.குலநாயகம்,
செயலாளர்.**

## காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம் (இந்தியா) தொலைதூரக்கல்வி கற்பதற்கான ஓர் பொன்னான வாய்ப்பு

சேவா லங்கா மன்றம் காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகத்துடன் (காந்திக்கிராம் கிராமிய பல்கலைக்கழகம், காந்திக்கிராம் - 624302, திண்டுக்கல், தமிழ்நாடு, இந்தியா.) இணைந்து இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. விருப்பமுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இங்கு இரண்டு பிரிவுகள் உள்ளன.

1. Regular Programme (Group A)
2. Diploma in Certificate Programme (Group B)

Regular Programme, இப் பல்கலைக்கழகத்தில் 2007ம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பிக்கவுள்ளது. தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2007ம் ஆண்டு தை மாதம் இந்தியா செல்ல முடியும். Diploma in Certificate Programme பயில விரும்புவர்கள் ஒன்று அல்லது இரண்டு பாடநெறிகளை கற்க முடியும்.

**GROUP(A): REGULAR PROGRAMMES**

| Courses | Yrs | Courses | Yrs |
|---|---|---|---|
| Dip. In Agriculture | 2 | B.Tech. Habitat Engineering | 4 |
| PG Dip.In Seed Production | 1 | B.Tech.Sustainable Technology and Rual Industries | 4 |
| M.Sc.Diary Science | 2 | MBA Disaster Management | 2 |
| M.Sc.Medicinal Plants | 2 | MA Sociology | 2 |
| MA English & Communicative Studies | 2 | M.Phil.Development Sociology | 1 |
| M.Phil.English&CommunicativeStudies | 1 | MBA Small Business Management | 2 |
| B.Sc. /M.Sc.Physics | 3/2 | MBA Rural Industries Management | 2 |
| B.Sc/M.Sc Chemistry | 3/2 | BBA Rural Industries &Management | 3 |
| B.Sc Maths | 3 | MA Development Administration(for A/L Passed) | 5 |
| M.Sc Tech.(Industrial Maths with Comp. Applications) | 3 | BA Gandhian Social Work | 3 |
| M.Sc Extension &Community Development | 2 | MA Human Resource& Conflict Management | 2 |
| B.Sc Homescience | 3 | B.Com.Cooperation | 3 |
| M.Sc Food Science&Nutrition | 2 | M.Sc Geo Informatics | 2 |
| MCA(Master in Computer Applications) | 3 | M.Phil. Micro-Level Planning | 1 |
| M.Sc Information Technology | 2 | MBA Rural Project Management | 2 |

**GROUP(B): ADD-ON PROGRAMMES(3-6MONTHS)**

| | |
|---|---|
| Medical Lab Technology | Dip.in Human Rights* |
| Cert.in English Communication(Advanced) | Dip.in Entreprenesurship* |
| Dip.in English Communications Skills | Dip.in Garment Technology |
| Dip.in Biological Technologies | Dip.in Natural Dyes |
| Cert.in Multimedia | Dip.in Project Planning |
| Dip.in Fruit Processing | Dip.in Training and Development |
| Dip.in Bakery&Confectionary | Dip.in Journalism |
| Dip .in Cost Effective Construction Technology | Dip.in Mass Communication |

விண்ணப்பப்படிவங்களை இலங்கையிலுள்ள சேவா லங்கா மாவட்ட காரியாலயங்களில் நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 24.12.2006. தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கான நேர்முகத்தேர்வு தை மாதம் 2007ம் ஆண்டு 3ம், 4ம் கிழமைகளில் கொழும்பு, கண்டி, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும்.

Email : [illegible]sewalanka.org
Website : www.gru.sewalanka.org
Tel : 0602166333, 0602166334, 0602166335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 15 ✱ 07 ✱ 1928

உதிர்வு 22 ✱ 11 ✱ 2006

### அமரர் நாகலிங்கம் கனகரத்தினம்

கடந்த 22.11.2006 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் கனகரத்தினம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (63601)

**- குடும்பத்தினர்.**

## தவறிவிட்டது

தனபாலசிங்கம் சுதன் என்பவருடைய தே.அ.அ.(இல. 831990511V),வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம், விசேட அ.அ. என்பன உரும்பிராய்க்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் T.தபேசன்,அன்பகம், மூன்று கோயிலடி, உரும்பிராய் என்னும் முகவரியில் அல்லது T.P.: 021 222 3006, 021 4590293 இலக்கங்களில் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (63603)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாசமிகு நண்பன்
**சுஜீவனின்** தந்தை

### செல்லமுத்து விநாயகமூர்த்தி

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் மிகுந்த கவலையும் அடைகின்றோம். தந்தையின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**2ஆம் வருடம்,**
**மொறட்டுவ பல்கலைக்கழக**
**பொறியியற்பீட நண்பர்கள்.**

(63531)

## அந்தியேட்டி அழைப்பு



10-11-2006 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர் இளைப்பாறிய அதிபர்

### அமரர் சின்னத்தம்பி பொன்னையா (திரவியம் மாஸ்ரர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.12.2006) சனிக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோவிற்கடவை,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி. (63593)

**வனிதா குமரேசமூர்த்தி**
(மகள்).

## புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

# COMPUTER EXPRESS

80% Off

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை **இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்)** வெகு விமரிசையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், **அனைத்துக் கற்கைநெறிகளிற்கும் 80% கட்டணக் கழிவு வழங்குவதில் பெருமையடைகின்றோம்.**

| Course | Duration | Old fee | Fee |
|---|---|---|---|
| Diploma in Computer Science | மாதம் | ~~8,250~~ | 1,650 |
| Honours Diploma in Computer Science | 5 மாதம் | ~~10,500~~ | 2,100 |
| Diploma In WebPage Designing | 4 மாதம் | ~~8,250~~ | 1,650 |
| Diploma in Graphic Designing | 4 மாதம் | ~~8,250~~ | 1,650 |
| Diploma In Desktop Publishing | 4 மாதம் | ~~7,250~~ | 1,450 |
| Diploma in Hardware Engineering | 3 மாதம் | ~~7,250~~ | 1,450 |
| Diploma in AutoCAD | 3 மாதம் | ~~7,250~~ | 1,450 |
| Accounting Package | 3 மாதம் | ~~8,250~~ | 1,650 |
| MS Office | 3 மாதம் | | 1000 |

50% Off

**Advances Courses**

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

Start on: Batch I - 22/12/2006 ,Batch II :- 23/12/2006 , Batch III :- 24/12/2006 , Batch IV :- 27/12/2006

*Jaffna Head office*
No 15,
Sirambiyadi Lane.
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

*Branch office*
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதினை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 29 ✱ 08 ✱ 1928

உதிர்வு 04 ✱ 01 ✱ 2003

### அமரர் பொன்னையா சுவாமிநாதபிள்ளை

திதி: துதியை

பக்தியுடன் பாசம் ஊட்டி பார்போற்ற
வாழவைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் நான்கு சென்றாலும் நாங்கள்
நடந்துவந்த பாதையில் மறையுமோ உங்கள் நினைவு.

கொக்கன்,
இணுவில் கிழக்கு.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(63607)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



**கடந்த 22.11.2006 புதன்கிழமை அன்று**
**சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்**

## அமரர்

## கந்தையா இராசேந்திரம்

மலர்வு 20✱07✱1929

உதிர்வு 22.11.2006

**மனிதருள் மாணிக்கமாய்**
**அன்புக்குரியவராய் வாழ்வாங்கு வாழ்ந்து**
**இன்று இறைவனுடன் ஒன்றித்த**
**எம் அன்புத் தந்தையின்**
**நினைவலைகள் என்றும்**
**எம்மை விட்டு அகலாது.**

இன்று (22.12.2006) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(63569)

**இல.830, காங்கேசன்துறை வீதி,**
**தட்டாதெரு, யாழ்ப்பாணம்.**

**- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்நடைத் தீவனங்களை

# கறுப்புச் சந்தையில் விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.22

பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கால்நடைத் தீவனங்களைப் பெற்றுக்கொள்பவர்களில் சிலர் அவற்றைக் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். அவ்வாறு செய்யும் பண்ணையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரித்ததாவது:-

பதிவு செய்யப்பட்ட கால்நடை பண்ணையாளர்களுக்கு கால்நடைகளுக்கான தீவனம் அவ்வப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

அவற்றை பெற்றுக்கொண்ட பண்ணையாளர்கள் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இத் தீவனங்களை வாங்கி விற்பனை செய்யும் வியாபார நிலையங்கள் மீதும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (202)

# எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேசிய பாதுகாப்புத் தினம்

## அன்று பிரார்த்தனைகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.22

ஆழிப்பேரலை மற்றும் இயற்கை அனர்த்த அழிப்புகளை நினைவு கூர்ந்தும் அவற்றால் மரணமானவரின் ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்திக்கும் வகையிலும் டிசெம்பர் 26 ஆம் திகதியைத் தேசிய பாதுகாப்புத் தினமாக அரசு பிரகடனப்படுத்தியுள்ளது.

இதையொட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையின் அனைத்து சமயத் தலங்களிலும் பிரார்த்தனைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு மத விவகார அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கமைய ஆழிப்பேரலை மற்றும் இயற்கை அனர்த்தங்களால் மரணமுற்ற அனைவரதும் ஆத்மசாந்திக்காக அனைத்து இந்துமதக் கோயில்களிலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.25 மணிமுதல் 9.27 வரை இடைவிடாது ஆலய மணிகளை ஒலிக்கச் செய்யுமாறு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

## மீன் வகைகளின் விலைகள் சரிவு படையினரின் அனுமதியின் பின்னர்

குருநகர், டிசெ.22

யாழ். குடாக்கடலிலும் வடமராட்சியிலும் மீன் பிடிக்க படையினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மீன் விற்பனை செய்யப்படும் சந்தைகளில் மீனின் விலை சரிந்து வருவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் கிலோ 280 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த சூடை மீன் கடந்த சில நாள்களாக கிலோ 120 ரூபா வாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதே நேரத்தில் ஏனைய மீன் வகைகளை யும் முன்னைய விலைகளிலும் குறைந்த விலைகளில் பெற்றுக்கொள்ள முடிவதாக நுகர்வோர் தெரிவித்தனர். (51)

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பம்

காரைநகர், டிசெ.22

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மார்கழித் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் காலை 7மணி முதல் மூலமூர்த்திகளான ஐயனார், சிவன் ஆகியோருக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று தொடர்ந்து திருவெம்பாவை ஓதுதலும் 11மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் சுவாமி திருவீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும்.

எதிர்வரும் 28ஆம் திகதி கயிலாய வாகன உற்சவமும், அடுத்த மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணிக்கு பஞ்சரத பவனியும் அன்று இரவு 2மணி முதல் நடேசர் அபிஷேகமும் மறுநாள் அதிமாலை 5மணிக்கு ஆருத்திரா தரிசனமும் இடம்பெற உள்ளது. தொடர்ந்து பி.ப. 3 மணிக்கு கிருஊடல் உற்சவமும் உள்வீதியில் தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

இவ் உற்சவத்தை முன்னிட்டு உற்சவ காலங்களில் தினமும் யாழ்.நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகள் நடைபெற உள்ளதுடன் ஆலய சூழலில் உள்ள மணிவாசகர் மடாலய, அறப்பணி நிலையம் என்பவற்றில் அன்னதான நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (73)

## கூ.ச.கிளை இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.22

பலாலி வீதியில் இயங்கி வந்த யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 9 ஆம் இலக்கக் கிளை தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிளை தற்போது 12 1/1, அரசடி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் இயங்கி வருகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

## சிறப்புற நடைபெற்ற அங்கவீனர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.22

சர்வதேச அங்கவீனர் தின நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கரித்தாஸ் - கியூடெக், சிறுவர் பாதுகாப்பு நிதியம், யுனிசெப் மற்றும் யு.என்.ஏச்.சி.ஆர். ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் 275 அங்கவீனர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன. (202)

## சாரதி அனுமதிப்பரீட்சைகள் ஜனவரியில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.22

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் தடைப்பட்டிருந்த சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் அடுத்த வருடம் முதல் மீண்டும் நடைபெறும் என மோட்டார் திணைக்களத்தின் யாழ்.அலுவலக வட்டாரம் தெரிவித்தது.

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்பவர்கள் அவற்றைப் பூர்த்தி செய்து இந்த வருட முடிவுக்குள் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு திணைக்களத்தினர் கேட்டுள்ளனர். (202-88)

# பிரயாண அனுமதிப்பத்திரங்கள் இனி பிரதேச செயலகங்கள் ஊடாக

## சமூகசேவைகள் அமைச்சு தகவல்

யாழ்ப்பாணம், டிசெ.22

வெளிமாவட்டங்களுக்குப் பிரயாணங்களை மேற்கொள்ளும் பயணிகளுக்கான பிரயாண அனுமதி விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இத்தகவலை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இதுவரை காலமும் இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தின் மூலம் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வந்தன. அங்கு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து கொடுப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அமைச்சர் உரிய தரப்பினருடன் தொடர்புகொண்டதையடுத்து விண்ணப்பப் படிவங்களை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது. (202)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், டிசெ.22

இலங்கை தொழிற்பயிற்சி சபை சண்டிலிப்பாய் பிரதேசசெயலகம் ஊடாக நடத்தவுள்ள பலவேறு தொழில்பயிற்சிகளுக்கு விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல், கணனி பிரயோக உதவியாளர் ஆகியபயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (202-100)

## மருத்துவமுகாம்

வலி.வடக்கு, டிசெ.22

மல்லாகம், தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்றும்நாளையும் சிக்குன்குனியாநோய்க்கான மருத்துவ சிகிச்சை முகாம் நடத்தப்படவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 12.30 மணிவரை கணேசா சனசமூக நிலையத்திலும் -

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய யாத்திகர்கள் விடுதியிலும் இம் முகாம் நடைபெறவுள்ளது.

நோயாளர்களுக்கு உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதுடன் மருந்துகளும் வழங்கப்படவுள்ளதாக தலைவர் கே. திருநாவுக்கரசு தெரிவித்தார். (202-86)

* * *

சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் கோயில்பற்று லயன்ஸ்கழகத்தினால் இலவச மருத்து முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது.

காலை 9 மணி முதல் சண்டிலிப்பாய் வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ள இம் மருத்துவ முகாமில் தற்போதுபரவிவரும் சிக்கின்குனியா உட்பட ஏனைய மருத்துவப் பரிசோதனைகளும் இடம்பெறுள்ளது.

# பாலாவின் பிரிவு உலகத்தமிழ் இனத்தையே கலங்கவைத்துள்ளது

## இரங்கலுரையில் சு.ப.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி, டிசெ.22

விடுதலைப் போராட்டம் தோற்றம் பெற்ற ஆரம்பகாலம் தொட்டு எமது தேசியத் தலைவரோடு கூடியிருந்து அனைத்து சோதனைகளையும் வலிகளையும் தாங்கி,சவால்களுக்கும் சங்கடங்களுக்கும் முகங்கொடுத்து செயற்பட்ட பாலா அண்ணாவின் பிரிவு உலகத்தமிழினத்தையே கலங்க வைத்திருக்கின்றது என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது விடுதலைப் போராட்டம் அதனது புற அகக் காரணிகளினால் வனையப்பட்டு ஆயுதப்போராட்டமாக உருவெடுத்த காலத்தில் பாலா அண்ணா தன்னையும் இந்தப் போராட்டத்தில் பங்காளி ஆக்கினார். மேலைத்தேச கீழைத்தேச தத்துவங்கள், மானுட வளர்ச்சி பற்றியதான ஆய்வு உலகிற்கும் தனது இன விடுதலைப் போராட்ட களத்திற்குமிடையே எதனைத் தேர்வு செய்வது என்ற நிலை வந்த போது கேள்விகளின் வீண் போக்கில் தனது இனத்தின் உரிய அபிலாசைகள் மானுட விழுமியங்கள் சிதைக்கப்படுவதை அவர் பொறுத்துக்கொள்ளவில்லை.

மூன்று தசாப்தத்திற்கு மேலாக பயனின்றி கடைப்பிடித்துவந்த சாத்வீக அரசியல் அணுகுமுறை சாதியமற்றது என்பதனை உணர்ந்து அதனையே சகலருக்கும் உணரச்செய்தது. ஒழுங்கமைக்கப்பட்ட புரட்சிகர இயக்கத்திற்கு துணையாகி நின்றார். இதுவே காலத்தினால் கனிந்துவந்த உறவென்றார் எமது தேசியத் தலைவர்.

அவரது பிரிவின் துயர் சர்வ உலகிற்கும் ஏற்படுத்தியிருக்கும் வேதனை அவர் வரித்துக்கொண்ட இலட்சியத்தின் பாற்பட்டதாகும். அவர் நேசித்த, நெறிப்படுத்திய இன விடுதலை என்ற காலக்கனியே உலகத் தமிழினத்தின் வேண்டுகையாகவும் இருக்கிறது.

பூமிப்பந்தின் ஒவ்வொரு புள்ளியிலிருந்தும் கேட்கும் துயரமொழிகள் பாலா அண்ணையின் ஆத்ம தரிசனமான தமிழீழ விடுதலை என்பதையே உரைத்து உறுதிப்படுத்தி நிற்கிறன. அன்னாரின் மறைவுகுறித்து கேட்கின்ற அத்தனை குரல்களும் தமிழின விடுதலைக்கான குரல்களே என்பதனை மறுப்பதற்கு எவருமில்லை. அவர் மீதான நேசிப்பு என்பது அவருடைய துயரக் கடலிலே மூழ்கியிருக்கும் எம் மக்களுக்கும் மண்ணுக்கும் பெரும் ஆறுதலுக்கும் உற்சாகத்திற்கும் வழிகாட்டியிருக்கின்றது.

# ‘ஏ-9’ வீதியூடாக அனுப்புவதற்கு பொருள்கள் தயார் என்கிறது அரசு

## புலிகளிடம் அனுமதி பெற மீண்டும் முயற்சி என்கிறார் அரச பேச்சாளர்

யாழ்ப்பாணத்திற்கு ‘ஏ-9’ வீதியின் ஊடாக அனுப்பப்படுவதற்காக உணவுப் பொருள்கள் தயார் நிலையில் இருக்கின்றன அனுப்புவதற்கான அனுமதியைப் புலிகளிடமிருந்து அவசரமாகப் பெற்று தருமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவையும் அரசு மீண்டும் கேட்டுள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதுபற்றி மேலும் கூறியதாவது:-

''யாழ்ப்பாணத்திற்கு ‘ஏ-9’ வீதியின் ஊடாக உணவுப் பொருள் களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. உணவுப் பொருள்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருள்களை அனுப்புவதற்காகப் புலிகளின்அனுமதியை நாம் கேட்டிருந்தோம். அதற்கு அவர்கள் எந்தவித பதிலை யும் கூற வில்லை.

இதற்கான அனுமதியை உடனடியாகப் பெற்றுத் தருமாறு செஞ்சிலுவை சர்வதேசக் குழுவையும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவையும் நாம் மீண்டும் கேட்டுள்ளோம்'' - என்றார்.

# 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் 7 மாதங்களில் இடம்பெயர்வு

கடந்த ஏழு மாத காலத்தில் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து மேலும் 2 லட்சத்து 10 ஆயிரம் பேர் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். ஆழிப்பேரலைப் பேரழிவினால் தங்கள் சொந்த இடங்களை விட்டு வெளியேறிய மக்கள் தொகையில் இது அரைவாசியென்று முன்னணி பிரித்தானிய துயர் துடைப்பு அமைப்பு ஒன்று கவலை தெரிவித்துள்ளது.

போரின் பயங்கரமான பாதிப்பும், நாட்டின் சில பகுதிகளில் போக்குவரத்துச் சேவை கட்டுப்படுத் தப்பட்டிருப்பதும் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை முடக்கியுள்ளன. அத்துடன், மனிதாபிமான உதவிகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

உதவி நிறுவனங்களுக்கான கட்டுப்பாடு, கட்டுமானங்களை உரு வாக்குவதில் பாரிய தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் பணியாளர்களினால் சில பகுதிகளுக்குச் செல்ல முடியாமல் உள்ளது. ஆழிப்பேரலை மீள் நிர்மாணப் பணிகளின் அளவிலும், பணிகள் தொடர்வதிலும் நாட்டின் வடக்கிற்கும், தெற்கிற்கும் பாரிய வேறுபாடுள்ளது.

ஏறக்குறைய 5 லட்சம் மக்கள், யாழ். குடாநாட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் பெரும் பாதிப்புக்குள் ளான மக்கள், அண்மைய தாக்குதல்களால் இரண்டாம் முறையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆழிப்பேரலை மீள் நிர்மாணத்திற்கும், தேவைகளுக்கும் என அளிக்கப்பட்ட நன்கொடை அந்தத் தேவைகளுக்கே செலவிடப்பட வேண்டும். அதே நேரத்தில் அண்மைய போராட்டத்தையும் அதனால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களின் தேவைகளையும் நாம் புறக்கணிக்க முடியாது என அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில வகுப்பு

தீவகக் கல்வி வலயத்தில் பாடசாலையைவிட்டு விலகிய மாணவர்களுக்கென வலய அலுவலகத்தால் ஆங்கில வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வகுப்புகளில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 'முகாமையாளர், ஆசிரிய நிலையம், வேலணை'எனும் முகவரிக்கு உடன் அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (202)

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 25/12/2006 - 08.30

மாணவர்களின் நலன்கருதி எமது கிளை நிறுவனத்தினை இல 167,கஸ்தூரியார் வீதியில் (உதயன் பணிமனை அருகில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வகுப்புக்கள் அனைத்தும் எமது கிளை நிறுவனத்திலேயே நடைபெறும். அனுமதிகளை தலைமையகத்திலும் கிளை நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

## தகவல் தாருங்கள்



### வடிவேலு நிவேதன்

குடத்தனை

25.07.2006இல் கிளிநொச்சியிலிருந்து முகமாலை பஸ்ஸில் வீட்டிற்கு வருவதற்காக பயணித்த எனது மகன் வடிவேலு நிவேதன் வீடு வந்து சேரவில்லை. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குடத்தனை மேற்கு, குடத்தனை. வடிவேலு புஸ்பராணி

(சி/51619)

தென்மட்டுவில் தேனொளி மாதர் சங்கத் தலைவி
செல்வி தனபாக்கியவதி கந்தையா
அவர்களின் தாய்

### திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா

அவர்களின் மறைவையொட்டிய

## கண்ணீர் அஞ்சலி

தன்னிகரில்லாத் தலைவி தனத்தினை நமக்களித்த
எந்நிலை வந்தபோதும் முகமது கோணாதன்பு
முன்னிலைப் பண்புமிக்க வள்ளிப்பிள்ளையின் பிரிவால்
கண்ணில் நீர் சிந்துகின்றோம் ஆன்ம சாந்திக்காய் இறைஞ்சி.

தென்மட்டுவில்
தேனொளி மாதர் சங்கம்.

(63626)

## நன்றி நவில்கின்றோம்



### செல்லையா வீரசிங்கமாகிய

எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் வார்த்தை கூறிய அன்பார்ந்த நெஞ்சங்களுக்கும் ஆறுதல் செய்தி அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக எமது துயரத்தில் பங்குகொண்ட வெளிநாட்டு மற்றும் கொழும்பு நண்பர்களுக்கும் உறவினருக்கும் நேரடியாக மரணச்சடங்கில் கலந்து சிறப்பித்த உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், மேலும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வீ.ரவீந்திரகுமார், சகோதரர்கள்.
சுப்பஸோ டிஜிட்டல் கலர் லாப்
கொழும்பு, யாழ்ப்பாணம்.

(சி/51616)

**விற்பனைக்கு**

வைத்தியர் ஒருவரின் தனிப்பாவனையில் உள்ள YAMAHA V.50 (BLUE)(NPGK XXXX) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
HARAN JEWELLERY
50, KANNATHIDDY ROAD, JAFFNA.

பாஜாஜ் முச்சக்கர, இருச்சக்கர உதிரிப்பாகங்கள் அனைத்தும் குறைந்த விலையில் / பழைய விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:
கோப்பாய் வீதி, ஞானவைரவர் கோயிலடி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் (ஆரணி ஓட்டோஸ்).
Tel. No.: 021 222 6942

## துயர் பகிர்கின்றோம்



நல்லூர் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் திருமதி லலிதாம்பிகை விநாயகமூர்த்தி அவர்களின் அன்புக் கணவர்

### செல்லமுத்து விநாயகமூர்த்தி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் பிரதேச செயலகம்
நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
திருமதி பகீரதி சுந்தரலிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் வல்லிபுரம் கதிரவேலு

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள்.
யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி நல்லினி சிவராம் அவர்களின்
பாசமிகு தந்தை

### சின்னப்பு கனகசபாபதி

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, நாமும் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
ஆசிரிய சகோதரத்துவம்.

### சுயதொழில் வாய்ப்பு

குடாநாட்டில் கணவரை இழந்த, கைவிடப்பட்ட பெண்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் சுயதொழில் வாய்ப்புக்கான திட்டங்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சுய தொழில் வாய்ப்புக்கான நிதி உதவி வழங்கும் திட்டம் கடந்த திங்கட்கிழமை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றையதினம் யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் சங்கீத ஆசிரியராகப் பணிபுரியும் திருமதி நிர்மலா சுகந்தநாதன் அவர்களின் அன்புக் கணவர்

**கிறிஸ்ரி சுகந்தநாதன்**

அவர்களின் பிரிவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம்.

(59697)

## முதலாவது வருட நினைவஞ்சலி

உதயம் 22 * 05 * 1927



மறைவு 22 * 12 * 2005

### சாமிநாதன் திருச்செல்வம் (காந்தி)

அன்பு காட்டிய ஐயாவே! குடும்பத்தை வழிநடத்திய தலைவனே!
எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே!
சோகத்தில் ஓராண்டு கடந்ததுவோ!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

மல்வம்,
உடுவில்.

(59676)

## மரண அறிவித்தல்கள்

மூத்த எழுத்தாளர் 'சாகித்தியரத்தினம்'

### தியாகராசா சண்முகம் வரதராசன் (வரதர்)

(ஆனந்தா அச்சம், புத்தகசாலை பங்காளர்)



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட தி.ச.வரதராசன் அவர்கள் 21.12.2006 அன்று காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஆறுமுகம் - மனோன்மணி (மலேசியா) தம்பதியரின் அருமை மருமகனும் மகாதேவி அம்மாவின் அன்புக் கணவரும் செந்தாமரை (கனடா), தேன்மொழி (ஆசிரியர், ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம்), மலர்விழி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்தானகோபாலன் (கனடா), சித்தார்த்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் கபிலன், நங்கை, வாசன் (கனடா), ஆதித்தா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அன்னம்மா, காலஞ்சென்ற தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சச்சிதானந்தன் (சிங்கப்பூர்), விவேகானந்தன் (மலேசியா), அமரர் பாலகிருஷ்ணன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2206) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

84/3, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 6164

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

(63617)

### T.S.அப்புத்துரை

(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் பண்ணாகம்,இணுவில், திருகோணமலை, சுன்னாகம் ஆகிய இடங்களில் தற்காலிகமாக வசித்தருமாகிய T.S அப்புத்துரை 20.12.2006இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் சங்கரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் கந்தையா, சுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புனிதவதி, திலகவதி (விவசாய அலுவலர் A.O.), காலஞ்சென்ற சரவணபவான் மற்றும் பூபாலசிங்கம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேதாரணியம் (பிரதம லிகிதர் - திருகோணமலை), தவராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிஷா, அபிஷா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பா.பாலச்சந்திரன்
கொட்டக்காடு லேன்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(63617)

### சிவக்கொழுந்து சிவதாஸ் (பாபு)



இலந்தை, கரணவாய் மத்தி,கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிற்சலாந்தில் வசித்து வந்தவருமாகிய சிவக்கொழுந்து சிவதாஸ் அவர்கள் 20.12.2006 புதன்கிழமை சுவிற்சர்லாந்தில் மரணமானார்.

அன்னார் சிவக்கொழுந்து - லீலாவதியின் மூத்த புதல்வனும் சிவகுமாரி, சிவப்பிரகாஸ் (லண்டன்), சிவானந்தப்பிரகாஸ் (பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை) ஆகியோரின் அன்புச் சகோரனும் ரதீஸ்வரனின் அன்பு மைத்துனரும் நம்மியனின் பாசமிகு மாமனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலந்தை,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

தகவல்:
சிவானந்தப்பிரகாஸ்
(சகோதரன் - யா/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

(63635)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## மஹிந்தவின் நோக்கும் ரணிலின் போக்கும் சந்திக்குமா?

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தமது அமெரிக்க விஜயத்தின் பின்னர், எதிர்பார்க்கப்பட்டது போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஆளுங்கட்சிகளில் பிரதானியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை, எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சந்திப்பது ஒன்றும் புதியதோ அன்றிப் புதுமையானதோ அல்ல. மிகக் குறிப்பாக, இரண்டு கட்சிகளும் இரண்டு வருடங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்ட சூழ்நிலையில் அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேச வேண்டிய தேவை உண்டு.

பல தசாப்த காலமாக புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டே இரண்டு கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதாகப் பெரிதாகப் பேசப்பட்டது; பேசப்படுகின்றது.

போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை - போர் நிறுத்த ஒப்பந்தம் ஒன்றைக் - கைச்சாத்திட்டவர் ரணில் விக்கிரமசிங்கா.

அந்த ஒப்பந்தம் நாட்டில் சுமார் நான்கு வருடங்களுக்காவது கணிசமான அமைதிச் சூழலை உண்டாக்கியது. நாடு முழுவதும் வாழும் சகல இன மக்களும் வன்செயல்கள் இல்லாத, ஓரளவேனும் சற்று நிம்மதியாக வாழ்வதற்கு வாய்ப்பளித்தது அந்த ஒப்பந்தம். எனினும் சமாதானப் பேச்சுக்களின் பிந்திய கட்டங்கள் குழம்பிப் போகும் நிலைக்கு வந்தன.

அந்தக் குழப்பத்துக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் சித்து விளையாட்டுக்களும் காரணம். ஆனால், சமாதானப் பேச்சுக்கள் தளர்ந்து போவதற்கு பின்புலத்தில் ரணிலின் சூக்குமங்களும் நிறையவே காரணமாக இருந்தன.

எப்படியோ, இனப்பிரச்சினைக்கு போரினூடாக அன்றி, பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணவேண்டும் என்பதில் ரணில் விருப்பமுடையவராக இருந்தார் என்பது நிராகரிக்க முடியாதது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ, தமிழர்களின் நியாயமான உரிமைகளைத்தானும் வழங்கக்கூடாது என்பதில் வெறிகொண்டு ஆடும் கட்சிகளைக் கூட்டுச் சேர்த்துப் பதவிக்கு வந்தவர். அவர்கள் போடும் தாளத்துக்கு ஆடுகிறார்.

போரை நடத்தி விடுதலைப்புலிகளைப் பலவீனப்படுத்தி, பேரினவாத மேலாதிக்கத்தை நிலைநாட்டக் கங்கணம் கட்டி நிற்கும் கட்சிகளோடு கூட்டுச் சேர்ந்தவர். அதனால் அவர் போரின் மூலம் தீர்வு காண்பதிலேயே நம்பிக்கை கொண்டு செயற்படுகிறார்; அல்லது நிர்ப்பந்திக்கப்படுகிறார்.

எனினும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதில் விருப்பமுடையவர், நாட்டம் உள்ளவர் என்று தன்னைக் காட்டிக் கொள்வதற்காக, அனைத்துக் கட்சிப் பிரதிநிதி குழுவையும், அந்தக் குழுவுக்கு ஆலோசனை வழங்க நிபுணர் குழுவையும் நியமித்துள்ளார்.

எனினும், நிபுணர்கள் குழுவில் ஒரு பிரிவினர் செய்த சிபார்சுகளை அரசாங்கம் விரும்பவில்லை அல்லது அவற்றிலிருந்து தூர விலகி நிற்க விழைகிறது.

ஆனால், அந்தச் சிபார்சுகள், இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வைக் காண்பதற்கு அரசமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு, ஓர் ஆரம்பப் புள்ளியாக அமையும் என்று ரணில் கருதுகிறார்.

அதனால் அமெரிக்கா சென்று அந்நாட்டு அரச உயர் பீடத்துக்கு அந்த யோசனைகளின் சாதகமான நிலைப்பாட்டை விளக்கி உள்ளார்.

அது மட்டுமன்றி, நியூயோர்க்கில் தங்கியிருந்தபோது, ஜப்பான், நோர்வே நாடுகளின் விசேட சமாதானத் தூதுவர்களுடனும், இந்திய வெளிவிவகார அமைச்சருடனும் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் உள்ள சாதகமான அம்சங்களை விளக்கியதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் மஹிந்தவின் முயற்சியின் ஆரம்பமே, பள்ளமும் மேடும் நிறைந்த கல் வீதியில் ஓடும் மாட்டு வண்டி போன்று தட்டி, முட்டித் தடக்குகிறது.

இந்த வண்டி குடைசாய்ந்து விபத்து ஏற்படாமல் தடுக்கும் வீரியம் இரு கட்சிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு உண்டா என்பதே இப்போதைய பெரிய கேள்விக்குறி!

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் ஹெல உறுமய ஆகிய கடுங்கோட்டுபாட்டாளர்கள், நிபுணர் குழுவின் குறிப்பிட்ட அறிக்கையைக் கண்டு பொங்கி எழுந்துள்ளனர்.

ஜே.வி.பி. அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து விலகிவிட்டது. ஹெல உறுமய விலகப் போவதாக மிரட்டி உள்ளது.

அரசாங்கத்துக்கு முண்டு கொடுக்கும் மேற்சொன்ன இரண்டு கட்சிகளும் விலகினாலும் கூட, ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக அதன் பிரமுகர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நிபுணர்கள் குழுவின் குறிப்பிட்ட அறிக்கையை சர்வ கட்சிப் பிரதிநிதிகள் ஆராய்ந்து அவர்களின் சிபார்சு அமைச்சரவைக்குத் தெரியப்படுத்தப்படும். அமைச்சரவையே அதனை ஏற்பதா, இல்லையா, என்பதனை முடிவு செய்யும்.

இவ்வாறாக அரசாங்கத்தரப்பில் நிபுணர்குழுவின் அறிக்கை என்ற பந்து அங்கும் இங்கும் தட்டி வீசப்படப் போகிறது. இறுதியில் இலக்குத் தவறி விழுந்து போகாமல் தடுக்க வேண்டிய மிகவும் கடினமான பணி ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு.

ஸ்ரீல.சு.க.- ஐ.தே.க. புரிந்துணர்வு ஒப்பந்தம் இது விடயத்தில் கைகொடுக்குமா, அல்லது அது பலவீனமுற்று விழுமா? மஹிந்தாவின் அரசியல் நோக்கும், ரணிலின் போக்கும் நேர்கோடுகளாகச் சந்திக்குமா அல்லது குறுக்கே தட்டுப்பட்டு வளைந்து போகுமா என்பதனை உடனடியாக ஊகிக்க முடியாது.

# கொழும்பில் இடம்பெறும் கடத்தல்கள்: ஜனாதிபதியோடு ரணில் ஆராய்வு

கொழும்பு, டிசெ. 22

கொழும்பில் கப்பம் பெறும் நோக்குடன் தமிழ் வர்த்தகர்கள் கடத் தப்படுவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாக வலியுறுத்தியுள்ளார்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் தமிழ் வர்த்தகர்கள் மற்றும் தனவந்தர்கள் கடத்தப்படுவதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமென ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவரிடம் உறுதியளித்தார் என ஐ.தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

**நிபுணர்கள் குழுவின் அறிக்கை குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது**

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நிபுணர்கள் குழு முன்வைத்த 37 பக்க அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுகளை ஆரம்பிக்கலாம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப் பின்போது ஆலோசனை தெரிவித்தார். நிபுணர்கள் குழுவின் இறுதி அறிக்கையை தாம் எதிர்பார்த்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது அமெரிக்க விஜயம் தொடர்பான விடயங்களையும் ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினார்.

ஸ்ரீ.ல.சு.கட்சி - ஐ.தே.கட்சிகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக செயலகமொன்றை அமைக்கவும் இச்சந்திப் பின்போது தீர்மானிக்கப்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## மூத்த எழுத்தாளர் வரதர் நேற்றுக் காலமானார்

யாழ்ப்பாணம், டிசெ.22



ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான வரதர் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 83.

'வரதர்' என்று தமிழ் எழுத்தாளர்களாலும் இலக்கிய ஆர்வலர்களாலும் அன்போடும் மரியாதையோடும் அழைக்கப்பட்டு வந்த மூதறிஞர் சாகித்தியரத்தினம் தி.ச. வரதராசன் நோயுற்று சில நாள்களாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

ஈழத்து முன்னோடி எழுத்தாளர்களில் ஒருவரான வரதர், அக்காலத்தில் வெளிவந்த சகல தமிழ்ப் பத்திரிகையிலும் எழுதியுள்ளார். சிறுகதை, குறுநாவல், கவிதை என சகல இலக்கியப் பரிமாணங்களிலும் பரிச்சயமான வரதர் ஐயா, அச்சுத்துறையிலும் தமது திறமையை வெளிப்படுத்தியவர்.

யாழ்ப்பணம் ஆனந்தா அச்சகம் மற்றும் புத்தகசாலையின் பங்காளராக நீண்ட காலமாகச் செயற்பட்ட வரதர், பல சஞ்சிகைகளை வெளியிட்டார். 1960களின் முற்பகுதியில் 'புதினம்' என்ற பெயரில் செய்திப் பத்திரிகை ஒன்றையும் வெளியிட்டு வந்தார். மறுமலர்ச்சி, ஆனந்தன், தேன்மொழி, வெள்ளி, அறிவுக் களஞ்சியம் ஆகியவை அவர் நடத்திய ஏனைய சஞ்சிகைகளாகும்.

தமிழில் பல குறிப்புக் கையேடு (Directory) ஒன்றை முதல் முதலில் வெளியிட்டார். குறிப்பாக மறுமலர்ச்சிக் காலத்தில் பல எழுத்தாளர்களை உருவாக்கியவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, மகாகவி, சொக்கன், கனகசெந்திநாதன், பொன்முத்துக்குமாரன், பேராசியர் கைலாசபதி, முருகையன், நீலவண்ணன், செங்கை ஆழியான், சோமகாந்தன், நாவற்குழியூர் நடராசன், காரைசுந்தரம் பிள்ளை போன்ற பல பிரபல எழுத்தாளர்களின் ஆக்கங்களை வரதர் வெளியிட்டுள்ளார்.

இளைஞர்கள், வயதானவர்கள் என்ற பேதமின்றி சகல தரப்பு எழுத்தாளர்களாலும் மதிக்கப்பட்டவர் வரதர். ஈழத்து இலக்கியவாதிகள் மத்தியில் அரசியல் பேதங் கள் தலைதூக்கியிருந்த காலத்திலும் கூட அவர் ஒருபக்கம் சாராமல் எல்லாத் தரப்பினராலும் அன்போடு மதிக்கப்பட்டவராக விளங்கியவர். (அ-ப)

## மீண்டும் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.22

இடைநிறுத்தப்பட்டிருந்த திருமலை - காங்கேசன் பயணிகள் கப்பல் சேவை மீண்டும் நேற்று ஆரம்பமானது.

கடற்கொந்தளிப்புக் காரணமாக கடந்த 15ஆம் திகதி முதல் இக்கப்பல் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

கடல்கொந்தளிப்பு சீரானதையடுத்து நேற்று கப்பல்சேவை ஆரம்பமானது என்றும் -

யாழ்ப்பாணத்தில் இருந்து 300 பேர் நேற்று கப்பல்மூலம் பயணம் செய்தனர் என்றும் - யாழ். நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (1)

## அமைச்சருடனான சந்திப்புக்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.22

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நடத்தவிருந்த பல சந்திப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது என்று அமைச்சு அறிவித்துள்ளது.

உதய சூரியன் அமைப்பின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு இன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கும் -

யாழ். வகுப்புத் தொழிலாளர்களுக்கான சந்திப்பு 26ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கும் - பனை தென்னைவள கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதி நிதிகளுடனான சந்திப்பு அடுத்தமாதம் 2ஆம் திகதி முற்பகல 11 மணிக்கும் -

யாழ். மரக் கூட்டுத்தாபன ஊழியர்கள் மற்றும் யாழ். விழிப்புலனற்றோர் அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பு அடுத்தமாதம் 4ஆம் திகதியும் - இடம்பெறும் என்று அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிருசுவில் கொலை: மூவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி,டிசெ.22

மிருசுவில் வடக்குப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற ஒருவரின் மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மூன்று பேரைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சூரியகுமார் அஜிந்தன், விக்னராசா செல்வந்தன், சிவதாசன் நிஷாந்தன் ஆகியோரை நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

மூன்று சந்தேக நபர்களையும் இன்று வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.



சென்னையில் நேற்றுமுன்தினம் தமிழக முதல்வர் கருணாநிதியை சந்தித்துப் பேசிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள் அவருடன் எடுத்துக்கொண்ட படம். பேராசிரியர் சு ப. வீரபாண்டியன் மற்றும் அமைச்சர் மு.க.ஸ்டலின் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## புலமைப்பரிட்சை முடிவுகள் யாழ்ப்பாணத்தில் வெளியாகின

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட 5ஆம் தர புலமைப்பரிசில் விசேட பரீட்சை முடிவுகள் நேற்று பாடசாலைகளில் வெளியாகின.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் எடுத்துவரப்பட்ட முடிவுகள் யாழ். கல்வி வலயத்தில் வைத்துப் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டன.

முடிவுகள் ஏற்கனவே இணையத் தளத்தில் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (அ-1-88)

## கப்பலில் பயணம் செய்த வேளை மரணமான இளம் பெண்

யாழ்ப்பாணம்,டிசெ.22

திருகோணமலையில் இருந்து நேற்று காங்கேசன்துறைவந்து சேர்ந்த கப்பலில் பெண் ஒருவர் மரணமானார்.

இணுவிலைச் சேர்ந்த கோபல் சிவவதனி (வயது - 29) என்பவரே மரணமானவர் என்று இனங்காணப்பட்டது.

சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மரண விசாரணை இன்று நடம்பெறும்.

அதன் பின்னர் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-68)

## நாளை

மார்கழி 08
சனிக்கிழமை
23.12.2006
திதி : திருதியை
மாலை 05.57
நட்சத்திரம் : உத்தராடம்
நண்பகல் 12.01

## மூன்று கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம்,டிசெ.22

பருத்தித்துறை துறைமுகத்தில் ஒரே நேரத்தில் மூன்று கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

'என்கிலிப்பர்' கப்பலில் இருந்து கோதுமை மாவும் -

'...' கப்பலில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களும் -

மற்றுமொரு கப்பலில் இருந்து சிமெந்தும் - இறக்கப்பட்டு வருகின்றன.

கடற்கொந்தளிப்பு ஓரளவு சீராகியுள்ளதால் பொருள் இறக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

பொருள்கள் இறக்கும்பணியை அ... அதிபர் கே.கணேஷ் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இரட்டைவேடம் போடுகிறது

## அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது

கொழும்பு,டிசெ.22

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இரட்டை வேடமிடுவதாக சிறிலங்கா அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

ஊடகவியலாளர் மாநாடு ஒன்றில் தேசிய பாதுகாப்புக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்தார்.

அமைச்சர் இது குறித்து தெரிவித்ததாவது:

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் விடுதலைப் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக உண்மை நிலையை உலகுக்கு அறிவித்த ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

இதனால் ஏற்பட்ட உள்ளூர் மற்றும் சர்வதேச அழுத்தம் காரணமாவே அவர்களில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் 7 ஆண்களையும் ஒரு பெண்ணையும் தவிர ஏனையோரை விடுவித்துள்ளனர். ஊடகங்கள் வழங்கிய அழுத்தமே அதற்கான முக்கிய காரணமாகும். கடத்தப்பட்ட மாணவியொருவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. இக்கடத்தல் தொடர்பாக முன்னுக்குப் பின் முரண்பட்ட அறிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

மாணவர்கள் தமது சுயவிருப்பத்தின் பேரிலேயே யுத்தப் பயிற்சிக்காக வந்து சேர்ந்தனர் என முதலில் கூறினர். 'எங்கோ தவறு நடந்துவிட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிப்போம் என பின்னர் தெரிவித்தனர். கடத்தப்பட்ட மாணவர்கள் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுவிட்டனர் என கடைசியாக அறிவித்தனர். உள்ளூர் வெளியூர் அழுத்தங்கள் காரணமாக அவர்களுக்குள் ஏற்பட்டுள்ள குழுப்பமான நிலையை இது தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

கல்வியறிவில்லாத, சிந்திக்க முடியாத சமூகம் ஒன்றை உருவாக்கி அவர்களை யுத்தத்தில் ஈடுபடுத்துவதே பிரபாகரனின் நோக்கம். இது விடயத்தில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு இரட்டை நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது - என்று தெரிவித்தார் ரம்புக்வெல.

# தமிழ் வர்த்தகர்களைக் கடத்துவதில் அரசாங்கத்துக்கு தொடர்பு

## எஸ்.பி. திசநாயக்கா குற்றச்சாட்டு

கொழும்பு, டிச. 22

தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்படுதல் மற்றும் கொலை செய்யப்படும் சம்பவங்களில் அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான எஸ்.பி. திசநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் இயக்கதின் சார்பில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:

மாத்தறை பகுதியில் கோடீஸ்வர தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டு, பொலநறுவவின் மன்னம்பிட்டிய பகுதிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். கோடிக்கணக்கான ரூபா அறவிடப்பட்ட பின்னர் அவர்கள் விடுவிக்கப்பகின்றனர். மன்னம்பிட்டியவுக்கு சிறிலங்கா காவல்துறையின் சோதனைச் சாவடியூடாகவே தாங்கள் கொண்டு செல்லப்பட்டதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். ஆகவே, இக்கடத்திலில் அரசாங்கத்துக்குத் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கிறோம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடைய கொலையாளிகள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

ஐக்கிய சோசலிசகட்சியின் பொதுச்செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயசிறி ஜயசேகர, மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உள்ளிட்டோர் இந்த ஊடக மாநாட்டில் பங்கேற்றனர்.

(மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

## ஷெல் வீச்சில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள்காயமடைந்துமட்டக்களப்புவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 2 வயது மற்றும் 9வயதுகளையுடையசிறுவர்கள்காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்த விடுதலைப் புலிகள் தரப்பில் உடனடியாகக் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. (ஐ)

# கிழக்குப் பல்கலைக்கு பதில் துணைவேந்தர் பத்மநாதன்

கொழும்பு,டிசெ.22

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதி என். பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்ட எஸ். ரவீந்திரநாத்திற்குப் பதிலாக விஞ்ஞானபீடத்தின் பீடாதிபதி என். பத்மநாதன் நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்து இந்தத் தகவலை வெளியிட்டார். (அ)

# இளைஞரின் சடலம் இனங்காணப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.22

தொண்டைமானாறு, வல்லை வீதியில் நேற்றுமுன்தினம் மாலை சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் நேற்று அடையாளம் காணப்பட்டது.

கொலையுண்டவர் துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த தங்கராசா தர்மகுசிங்கம் (வயது 24) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நெல்லியடி நகரப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளை வானில் வந்தோர் இவரைக் கடத்திச் சென்றதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# அடைமழை பெய்யக்கூடும்

கொழும்பு,டிசெ.22

வடக்கு - கிழக்கு பருவப் பெயர்ச்சி நிலை தீவிரமடைந்து இருப்பதால் இன்னும் சில நாள்களில் அடை மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலையின் காரணமாக மத்திய மலைநாட்டின் பல பகுதிகளில் மண்சரிவு உள்ளிட்ட பல அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை விவகாரத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில்லி வந்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்துப் பேசுவதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட பொழுதிலும் சந்திப்பு கைகூடவில்லை. ஆனால், இன்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் ஆசியுடன் இந்தியத் தலைவர்களைச் சந்திப்பதற்காக இவர்கள் புதுடில்லி வந்திருக்கிறார்கள். எனவே, இம்முறை இலங்கைத் தமிழ் எம்.பிக்கள் குழுவினர், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி உட்பட பல முக்கிய தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

''இலங்கைத் தமிழ் எம்.பிக்களின் இன்றைய புதுடில்லி விஜயம், இலங்கை தொடர்பாக இந்தியா இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கையில் முக்கிய புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டு விட்டதையே உணர்த்துவதாயிருக்கிறது'' என்று விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரான பழ. நெடுமாறன் தெரிவித்திருக்கிறார்.

''மூன்று மாதங்களுக்கு முன்னர் இலங்கைத் தமிழர் விவகாரத்தை இந்தியா கையாண்ட விதம் வேறு. இன்றைய நிலைமை வேறு என்றும் நெடுமாறன் கூறியிருக்கிறார்.

''இலங்கைக்கு இராணுவ உதவி எதனையும் இந்தியா வழங்கப் போதில்லை. பேச்சு மூலமான அரசியல் தீர்வொன்றையே இந்தியா வலியுறுத்தி வருகிறது என்று காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி அண்மையில் முதல்வர் கருணாநிதியிடம் வலியுறுத்திக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இப்படி செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது. இதேவேளை -

விடுதலைப் புலிகளின் ஆதரவு சக்தியாகிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்தியத் தலைவர்களோடு பேச்சு நடத்துவது 'முக்கிய திருப்பம்' என்று பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய ராஜதந்திரி ஒருவர் புதுடிலிலியில் தெரிவித்தார். (ஐ)

## செஞ்சிலுவைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்பில் ஆராயப்பட்டதாகக் கூறப்பட்டது.

ஜெனிவா மனித உரிமைகள் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனித உரிமை விடயங்களை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் பேணுவதுடன், அதற்கு முழு ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் உறுதியளித்தார்.

ஐ.சி.ஆர்.சி தலைவருடன் அதன் கிளிநொச்சிக் கிளைத் தலைவர் கட்ஜா அம்மையாரும் சந்திப்பில் கலந்து கொண்டார். தமிழ்ச் செல்வனுடன் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலன், ஐ.நா. மற்றும் சர்வதேசத் தொடர்பக இணைப்புச் செயலாளர் பி. தியாகராஜா, புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ. இளந்திரையன் ஆகியோரும் உடனிருந்தனர். (த)

## தமிழ்நாடு முழுவதிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வமாக நேற்று அறிவித்தது.

சென்னையில் இடம்பெறும் மனித சங்கிலிப் போராட்டத்தில் தி.மு.க. சார்பில் டி.எஸ். இளங்கோவன் தலைமையில் தி.மு.க. பிரமுகர்கள் மற்றும் தொண்டர் பங்குபற்றுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய மனித சங்கிலிப் போராட்டம் குறித்து திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இலங்கையில் ஈழத் தமிழர்கள், அப்பாவி பொதுமக்களை பட்டினி போட்டும் அவர்கள்மீது குண்டுமழை பொழிந்தும் சிங்கள அரசு தமிழினத்தை அழித்துவருவது தடுக்கப்பட வேண்டும்.

அங்கு செயற்கையாக ஒரு பஞ்சத்தை சிங்கள அரசு உருவாக்கி தமிழினத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதை முதலில் நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும்.

இதில் கட்சி, சாதி, அரசியல் வேறுபாடுகள் இருக்கக்கூடாது. ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற உணர்வு தான் இருக்கவேண்டும். அந்த உணர்வு மனித நேய அடிப்படையிலான உணர்வாக இருக்கவேண்டும்.

இராணுவ உத[illegible]களையோ வேறு வகையான உதவிகளையோ இலங்கை அரசுக்கு இரகசியமாகவோ வேறு எந்த வகையிலுமோ அளிக்கக்கூடாது என்பதை மத்திய அரசுக்கு வேண்டுகோளாக வைக்கிறோம் - என்றார். (அ)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிப்பது உள்ளிட்ட விடயங்கள் விரிவாக ஆராயப்பட்டன.

ஜாதிகசவிய தேசிய வலுவூட்டல் முன்னேற்றத்திட்டத்தை ஆராய்ந்து எதிர்கால நடவடிக்கைகளைத் தீர்மானிப்பது குறித்தும் யாழ்ப்பாணத்தில் பணிபுரியும் அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி நடமாடும் சேவையை நடத்துவது என முடிவுசெய்யப்பட்டுள்ளது என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகருடன் இராணுவத்தின் பிரதம அதிகாரி டொனால்ட் பெரேரா, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா ஆகியோரும் 25 அமைச்சர்களும்; பல திணைக்களங்களின் தலைவர்களும் வந்திருந்தனர். (அ-1)


**Speed IT net வழங்கும் விசேட சலுகை!!!**

உங்களுக்கு ,உங்கள் நிறுவனத்துக்கு என வெப்சைட் அமைக்கவேண்டும் என எண்ணினால் அரிய சந்தர்ப்பம்

பெயர் பதிவு : ரூ 500 (முதல்வருடம்)
சேவர் இடம் : ரூ 1500 (முதல்வருடம்)
வெப் டிசைன்: ரூ 2000 (ஒரு தடவை)
ஆகமொத்தம் ரூ4000 மட்டுமே.

•From100MB
•US Servers
•PHP/ASP
•MySQL/MSSQL

.com .net .org .info .biz .co.uk .lk .in (Any Domain)

72/28 பணிக்கர்லேன்,திருநெல்வேலி
தொலைபேசி: 4591871 ,0777 563213
வெப்தளம் :www.speeditnet.com

சக நிறுவனம் A2Z Com.Com 192 நாவலர் வீதி யாழ்ப்பாணம்

தொட்டிலடி சங்கானையில் இயங்கும்
**Jaffna Technical Institute**
இன் கிளை நிறுவனத்தில் பின்வரும் கணனிப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
Ms Office, DTP, Computer Hard Ware.
அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
விவரங்களுக்கு நேரில்.

**CATWAS.COM**
COMPUTER ACADEMY
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
TP: 021 222 3805
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான புதிய கணனி நெறிப் பிரிவுகள் ஆரம்பம்
DIPLOMA COURSES
Ms Office
DTP
Hard Ware
CERTIFICATE COURSES
Word XP/2003 Page Maker 7.0
Access XP/2003 Photo Shop 7.0
Excel XP/2003 Corel Draw 11.0
Power Point XP/2003 HTML
Kids Program
அனைவருக்கும் கணனிக்கல்வி என்ற இலக்குடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த கணனி அறிவினை வரையறுக்கப்படாத பயிற்சியினை வழங்கி வரும் ஒரே நிறுவனம்

தரம் 4 முதல் O/L வரை
தரமான ஆசிரியர்களின் சரியான வழி காட்டல்
**AAC**
66 வைரவர் கோயில் வீதி அரியாலை.
இன்னும் 20 தினங்களுக்கே அனுமதிகள் வழங்கப்படும்

COLLEGE OF ENGLISH
O/L எடுத்தோர், வெளிநாடு செல்ல உள்ளோர்
SPOKEN ENGLISH / GRAMMAR
மூன்று மாதத்தினுள் பேச, எழுத, வாசிக்க
ஆரம்பம்: 23.12.06 சனி 8 மணி
பிரிவு I - Sat, Sun 8 a.m.
பிரிவு II - 2 p.m. Mon, Wed
பிரிவு III - 3 p.m. பிரிவு - IV 4 p.m.

வெளிவந்துவிட்டது
**LOGIC II**
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது
(கடந்த கால வினா விடைகளுடனும்)
By. P. கமல்

**LOGIC**
மாதிரிப்பரீட்சை
Fri. 8 - 10 a.m.
UNIVERSAL
நாவலர்
By. P. கமல்

**2006 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!**
உங்கள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை "சீபி" இல் கணினிக் கல்வியுடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்.
உங்கள் பதிவுகளை இன்று முதல் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளலாம்.
Batch Starts On 01.01.2007 (Monday)
மேலதிக விபரங்களுக்கு நேரில்.
**CB Computer Academy**
Station Road, Kondavil.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.